# மெட்ரோ பயணியருக்கு கொரோனா விழிப்புணர்வு



■ திருமங்கலம் மெட்ரோ ரயில் நிலையத்தில், 'நிமிர்வு' கலையகத்தின் பறையாட்டம் மூலம், பயணியருக்கு கொரோனா விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

சென்னை, நவ. 9–

திருமங்கலம் மெட்ரோ ரயில் நிலையத்தில், கொரோனா தடுப்பு விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி நடந்தது.

சென்னை விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – எம்.ஜி.ஆர்., சென்ட்ரல் மெட்ரோ நிலையம் இடையே, மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன.

மெட்ரோ பயணியருக்கு, கொரோனா தடுப்பு குறித்த விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள், வரும், ஜன., 1ம் தேதி வரை நடத்தப்படுகின்றன.

இதையொட்டி, விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி, திருமங்கலம் மெட்ரோ நிலையத்தில், நேற்று காலை, 10:00 மணி முதல், 11:00 மணி வரை நடத்தப்பட்டது.

மெட்ரோ ரயிலில், பாதுகாப்பான பயணத்துக்கான ஏற்பாடுகள் குறித்தும், பயணியர் முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்வதை வலியுறுத்தியும், 'நிமிர்வு' கலையகத்தின் சார்பில், பறையாட்டம் நடத்தப்பட்டது.